நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.330/2023

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவலிங்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 17–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00PM

1. நான் குள்ளவீரன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு RF கேட் அருகே நான் இருந்தபோது அடையாளம் தெரியாத நபர் என்னுடைய பாக்கெட்டில் இருந்து ஒரு நபர் ரூ.500/– ஐ எடுத்துச்சென்றுவிட்டார்.

2. இதுசம்மந்தமாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. ஜெகநாதன் என் நண்பர் என்றால் சரிதான். நானும் அவரும் சம்பவதன்று ஒன்றாகத்தான் மது அருந்தினோம் என்றால் சரிதான். 22.07.2022 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும் ஜெகநாதனும் மேட்டுர் அணை RF கேட் பிரிவு அருகில் மது அருந்திவிட்டு சென்றபோது ஆஜர் எதிரி எங்களிடம் இருந்த மதுபாட்டிலையும் பணத்தையும் கேட்டார்.
2. நான் பணம் இல்லையென்று சொன்னேன். அதனால் எதிரி என்னுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு என்னுடைய சட்டை பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.550/– ஐ பறித்துக்கொண்டார் என்றால் நான் மதுபோதையில் இருந்ததால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
3. எதிரி மீது ஏற்கனவே பல வழக்குகள் உள்ளதென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் உண்மையை மறைத்து தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரியின் மீது சேலம் மாவட்டத்தில் நிறைய வழக்குகள் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நானும் எதிரியும் தெரிந்தவர் என்பதால் நான் அவரை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.10 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.